# <u>சார்பு நீதிமன்றம், சங்ககிரி</u>

**MCOP No.154/2017**

ம.சா.**2**

நாள். **06.02.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | **சிவகுமார்** | மதம்: | |
| தகப்பனார்/கணவர் பெயர்: | செல்லமுத்து | ஜாதி: | |
| கிராமம்: | | வேலை: | |
| வட்டம்: | | வயது: | |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் இம்மனுவில் 3 ம் நபர் ஆவேன். எங்கள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தில் இறந்துபோன ராமசாமி எனக்கு பக்கத்து ஊர்க்காரர் என்பதால் பழக்கம். விபத்து சம்பந்தமாக நான் ராமசாமி குடும்பத்தாருக்கு தகவல் சொல்லவும் இல்லை, போலீசாருக்கு தகவல் சொல்லவும் இல்லை. சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது. 2 நாட்கள் கழித்து காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரித்தார்கள். விபத்து தொடர்பாக போலீசார் வேறு யாரையாவது விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடத்தில்

சாலை தென்வடலாக செல்கிறது. நான் இருந்த டீக்கடை சாலையின் கிழபுறம் இருந்தது. ராமசாமி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார். ம.சா.ஆ.2 வரைபடம் சரியாகத்தான் உள்ளது. அந்த வரைபடத்தில் சம்பவயிடத்தின் சாலை கிழமேலாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதனால் சம்பவயிடத்தில் சாலை தென்வடலாக உள்ளது என நான் சொன்னது பொய் என்றால், சரிதான். அதனால் நான் சம்பவயிடத்தில் இருந்து விபத்தை நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தாக சொல்வதும் பொய் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- சிவக்குமார்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி